FATHIMA CENTRAL SENIOR SECONDARY SCHOOL
No:5, Police Lane, Alandur road, Saidapet, Chennai-600015

# ரோஷினி

February 2022 Published Monthly by the Teachers & Students



## குறளின் குரல்

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்

ஒழுக்கம் உடையவராக இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும். ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.

## ஒழுக்கம் நமக்கு சொல்லும் பாடம்

ஒழுக்கம் அன்பைத் தரும்.

ஒழுக்கம் ஆனந்தத்தை தரும்.

ஒழுக்கம் இன்பத்தை தரும்.

ஒழுக்கம் ஈகையை தரும்

ஒழுக்கம் உயர்வை தரும்

ஒழுக்கம் ஊக்கத்தை தரும்

ஒழுக்கம் எண்ணத்தை தரும்

ஒழுக்கம் ஏற்றத்தை தரும்

ஒழுக்கம் ஐசுவரியத்தை தரும்

ஒழுக்கம் ஒற்றுமையை தரும்

ஒழுக்கம் ஓதலைத் தரும்

ஒழுக்கம் ஔதாரியத்தை தரும்.

- மெர்லின். ரா - X (அ) வகுப்பு

# ஒழுக்கமே அழகு

ஒழுக்கம் அகத்தை அழகாக்கும் !

ஒழுக்கமாக இரு !

நீ !

அழகாக இருப்பாய்.

செழிப்பாக வளர்வாய்!

சரித்திரம் படைப்பாய்!

தடைகள் உடைப்பாய்!

இடும்பை களைப்பாய்

வாழ்வாங்கு வாழ்வாய்!

- மு. முகம்மது சுஹைர் - IX (ஆ)

# ஒழுக்கம் பெருமை தரும்

ஒரு ஊரில் ஒரு பெரிய கோடீஸ்வரர் வசித்து வந்தார். அவர் தனது ஊதியத்தில் தினமும் களி உருண்டையையும், மீன் குழம்பும் அங்கு வாழும் குழந்தைகளுக்கு கொடுப்பார். ஒரு சிறுமி தனது வேலைகளை முடித்துவிட்டு வருவதற்குள் குறைந்த அளவு மட்டுமே கிடைக்கும். அவளுக்கு தினமும் சிறிய அளவிலேயே களி கிடைக்கும். ஒருநாள் அந்த சிறிய களியை சாப்பிடும் போது ஒரு தங்க மோதிரம் கிடைத்தது.

அவள் அதை அடுத்த நாள் எடுத்து வந்து அந்தக் கோடீஸ்வரரிடம் கொடுத்தாள். அப்போது அவர் “நான் உன் ஒழுக்கத்தை சோதிப்பதற்காகத் தான் வைத்தேன் . அதனால் அதை நீயே வைத்துக்கொள் இந்த மோதிரம் உன்னை ஒழுங்காக வளர்த்த உன் அப்பா அம்மாவை சேரும் “என்றார். ஆகையால் இந்த கதை மூலம் நாம் ஒழுக்கமாகவும் பணிவாகவும் இருந்தால் அந்த பெருமை நம் பெற்றோரை சேரும் என்பது உண்மை

சை. ஹமீது ஃ பாரிஸ்- IX (ஆ)

-

# நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்

**முன்னுரை:**

“ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

என்பது வள்ளுவன் வாக்கு. ஒழுக்கத்தினால் ஒருவன் உன்னதமான நிலையை அடைவான். இழுக்கத்தால் ஒருவனுக்கு இதுவரை இல்லாத பழி வரும் என்கிறார் வள்ளுவர். ஒழுக்கத்தின் மேன்மையினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஒழுக்கம்:**

"பிறருக்கு தொல்லை தராத வாழ்வே
ஒழுக்க வாழ்வு”

- பெரியார்

ஒழுக்கம் என்பது ஒருவன் பிறருக்கு தீங்கிழைக்காமல் நல்ல வழியில் நற்பண்புகளோடு வாழ்வதே ஆகும். நாம் நமது நற்பண்புகளை நாள்தோறும் வளர்த்துக் கொள்வது நமக்கு நல்ல ஒழுக்கத்தை தரும். அன்பு, மரியாதை, பணிவு, தூய்மை, உண்மை, நேர்மை, அடக்கம், போன்ற நற்பண்புகளை. நம் வாழ்வில் கடைபிடித்து வாழ்வதே ஒருவனுக்கு அழகு தரும். எனவே நாமும் இப்பண்புகளை கடைபிடித்து வாழ்ந்து ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டும்.

## ஒழுக்கமுடையோராக வாழ்தலின் சிறப்பு

மாணவர்களாகிய நாம் சிறு வயதிலிருந்தே ஒழுக்கத்தின் நன்மையினை அறிந்து புரிந்து ஒழுக்கமுடையவராக வாழ வேண்டும். ஒழுக்கம் சிறுவயதிலிருந்தே வளர வேண்டும். அப்போது தான் நாம் பெரியவராக வளரும் போது அவ்வொழுக்கம் நமக்கு உயர்வைத் தரும். சிறு வயதிலிருந்தே நம் பெற்றோர் ஆசிரியர் மற்றும் முதியோர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் அவர்களுடன் அன்புடனும் பணிவுடனும் மரியாதையுடனும் நடக்க வேண்டும். அவர்களின் மனதை புண்படுத்தக் கூடாது. நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்ய வேண்டும். இவ்வாறு நமது ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கம் இருந்தால் நம் வாழ்வு செழிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## தீயொழுக்கத்தின் தீமை

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க அழுக்கு மனம் உள்ளவனின் வளர்ச்சியில்லாதன்மை போல் ஒழுக்கம் இல்லாதவனுக்கு வளர்ச்சி இல்லை. என்பதை இக்குறளில் வள்ளுவர் கூறுகின்றார். ஒழுக்கம் வாழ்வில் உயர்வை தரும்.தீயொழுக்கம் தீமையை மட்டுமே தரும்.

"கூடாநட்பு கேடாய் முடியும்"

என்னும் பழமொழிக்கேற்ப தீயொழுக்கம். உடையோரிடம் நட்பு கொண்டால் அது நமக்கு துன்பத்தை மட்டுமே தரும்.

தீயொழுக்கத்தின் தீமைகளை அறிந்து நாம் நல்லொழுக்கத்தினை நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

## முடிவுரை :

ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

'"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் "

என்று வள்ளுவர் ஒழுக்கத்தின் மேன்மையினை நமக்கு புரிய வைப்பதற்கு ‘ஒழுக்கமுடைமை’ என்று ஒரு அதிகாரத்தையே வருந்துள்ளார். நாமும் ஒழுக்கத்தின் மேன்மையினை அனைவருக்கும் எடுத்துரைத்து நம் வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்போம்.

- சஃப்ருல் ரஜீனா- VIII - (அ)

## ஒழுக்கத்தை கடைபிடி!

ஒழுக்கம் என்ற சொல் வெறும் வார்த்தையல்ல !.

அதை நாம் தினந்தோறும் கடைபிடித்து

நடக்க வேண்டும் என்றநீதி சொல்

தான் - ஒழுக்கம்!

- மொ. நூர் ஆயிஷா- IX (அ)

## ஒழுக்கம் ஆயுள் பெருக்கம்

அதியமானுக்கு நெல்லிக் கனியைக் கொடுத்த ஔவையார்க்கும் இருந்தது ஒழுக்கம். அதனால் அதியமானுக்கு கிடைத்தது ஆயுள் பெருக்கம்.

ஆண்டாண்டு காலமாய் செய்யப்பட்டு வருவது தமிழாக்கம்.

அதேபோல் என்றும் அழியாதிருக்க வேண்டும் நமது ஒழுக்கம்.

மனிதர்களுக்கு இயல்பாக இருப்பது ஆதிக்கம்.

அதையும் அடக்கும் இயல்புடையது நமது ஒழுக்கம்.

போட்டியில் வென்றால் கிடைப்பது பதக்கம்.

அதற்கு முன்னணியாக இருப்பது ஒழுக்கம்.

- ச. ஷமீமா - X (அ)

உனக்கு நீ நேர்மையாய் இரு!

அங்கே தான் ஒழுக்கம் ஜீவிக்கும்.

- தர்ஷன் சாய்- IV (அ)

தாயாய் கற்றுத் தருகிறாய்

அன்பில் ஒழுக்கம்

தந்தையாய் கற்றுத் தருகிறாய்

நடத்தையில் ஒழுக்கம்

இறையாய் கற்றுத் தருகிறாய்

பக்தியில் ஒழுக்கம்

ஆசிரியராய் கற்றுத் தருகிறாய்

எண்ணத்தில் ஒழுக்கம்.

- பு. வித்தேஷ் சாகர்- III (ஆ)

-

-

ஒழுக்கம் போர்க்களம் போன்றது நாம் ஒழுக்கமாக வாழ வேண்டுமானால் ஓயாமல் மனதோடு போராட வேண்டும். ஒழுக்கமில்லாத கல்வியால் ஒருவித பலனும் கிடையாது. ஒருவனுடைய உயர்வானது அவனை மட்டுமே சார்ந்து அமையும். அவனுடைய ஒழுக்கமானது அவன் தலைமுறையையே வாழ்த்தி அமையும்.

- சை. பாசித் ஃபாத்திமா -

## ஒழுக்கம் நாளத்தில் ஓடும் குருதி

ஒழுக்கம் வளைந்து ஓடும் நதியாகும்

வானில் தோன்றும் மதியாகும்

விளக்கில் ஒளி தரும் திரியாகும்

நாளத்தில் ஓடும் குருதி யாகும்.

- தா. முகமது அப்ரித் - VI

## ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து

ஒழுக்கம் என்பது தனக்கும், அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடப்பதும் நடந்தபடி சொல்வதும் ஆகும். பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றி சொல்வதை விட தன்னிடம் அது எந்த அளவு இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

பக்தி என்பது தனிச் சொத்து .

ஒழுக்கம் என்பது பொதுச் சொத்து.

- ஜா. அர்ஷியா ரஹீமா - VI (அ)

# ஒழுக்கம் உயர்வு தரும்

## முன்னுரை

" ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

திருவள்ளுவர். இந்தக் குறளில் 'ஒழுக்கத்தால் மேன்மை கிடைக்கும் என்றும் ஒழுக்கம் தவறுவதால் பழி ஏற்படும் என்றும் ஒழுக்கத்தின் சிறப்பை வலியுறுத்துகிறார் . கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தையும், கல்வியையும் இரு கண்களாக கடைப்பிடித்து வாழ்க்கைக் கல்வியை பயின்று சிறப்புற வேண்டும். ஒழுக்கத்தை காலம்தோறும் பேணிக் காக்க வேண்டும்.

## பொருளுரை

நீதி நெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் சான்றோர்கள் இயற்றிய நீதி நூல்கள் பல நீதி கருத்துகளை எளிய நடையில் நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன. அவைகள் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம் சிறுபஞ்சமூலம் பழமொழி முதலிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவை ஆகும்.

இவற்றில் திருக்குறள் உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லா நூலாக புகழப்படுகிறது. அதனால்தான் அதை ‘உலகப் பொதுமறை’ என போற்றுகிறார்கள். உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டு பயிலப்படுகிறது.

ஒழுக்கம் விழுப்பம் தரும். என்பது குறள் நெறி விழுப்பம் என்றால் உயர்வு என்று பொருள். ஒழுக்கம் வாழ்வில் உயர்வை தருவதால் ஒழுக்கத்தை உயிரினும் பெரியதாய்மதித்துப் போற்ற வேண்டும் என்று வள்ளுவர் குறளின் வழியே வலியுறுத்துகிறார். ஒருவர் தம் வாழ்வில் நன்மை அடைய வேண்டுமென்றால் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்தல் அவசியமானது. இக்கருத்தையே வள்ளுவர் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்” என்று விளக்குகிறார். நல்லொழுக்கத்தோடு கூடிய உயர்வே நிலைக்கும், தழைக்கும்.

## முடிவுரை

பள்ளிப்பருவத்தில் கவனத்துடனும் ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளாவிட்டால் வாழ்க்கைப் பாதையில் வழக்கிவிட நேரும். நம்மை வழுக்கி விழாமல் தாங்கிப் பிடிக்கும் ஊன்றுகோல் ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லும் நம் தமிழ் நீதி நூல்களும் தான். எந்த நிலையிலும் நமக்கு தீர்க்கமான வழியை

அறம்சார்ந்தே போதித்து வழிநடத்தும் வழிகாட்டிகள், நீதிநூல்கள் தான்.

மாணவர்களாகிய நாம் பாடங்களைக் கற்கும் நீதிக் கருத்துக்களை தேர்வு முடிந்தவுடன் மறந்து விடுதல் கூடாது. மாணவப் பருவத்திலேயே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நாட்டுப்பற்றையும் மேலும் வளர்த்து. எந்தவித பேதங்களும் இன்றி அனைவரையும் மதிக்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்ற நெறிப்படி நடக்க வேண்டும் இதையே வள்ளுவர் “கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” மாந்தருக்கு எடுத்துரைக்கிறார்.

- நௌ. ஷ. முகமது ஆசிப்- X (ஆ)

# ஒழுக்கம் முன்னேற்றத்தின் அடிப்படை

ஒழுக்கம் என்பது மனித முன்னேற்றத்தின் அடிப்படையாகும் அது இல்லாமல் எதுவும் செய்யப்படவோ அல்லது சரியாக பராமரிக்கவோ முடியாது. ஒழுக்கமின்மை அனைத்து வகையான தீங்குகளையும் ஏற்படுத்துகிறது. அது கொடுக்கின்ற தற்காலிக இன்பம் பெரிதல்ல. சுயநலம் தீய ஒழுக்கம். சுயநலம் அற்றதே நல்லொழுக்கம். ஆதலால் குழந்தைப் பருவத்தில் இருந்தே ஒழுக்க நெறியை போதிக்க வேண்டும். அதை கடைசி வரை கடைபிடிக்க வேண்டும்.அழகான முகம் குறுகிய காலத்திற்கு

நினைவில் இருக்கும். ஆனால் அழகான நடத்தை வாழ்நாள் முழுவதும் நினைவில் இருக்கும். உடலின் அழகை விட, நம் நடத்தையின் அழகில் கவனம் செலுத்தினால் வாழ்க்கை நமக்கு சுவாரஸ்யமாகவும், மற்றவர்களுக்கு உத்வேகமாகவும் மாறும்.

- ஐ. சித்ரலேகா - VI (அ)

## தளிர்களின் தூரிகைகள்





1. KALA RATNA AWARD 2021 - K. JASWANTHI (4B)
2. KALA SHRI AWARD 2021 - IRFANA I (XA)
3. VIDYA BHUSHAN AWARD 2021 - G. SATHANA (8A)
4. IDEAL PRINCIPAL AWARD 2021 - MRS.A.NAAZ PARWAR

ஆல் இந்தியா சிட்டிசன் டெவலப்மென்ட் நடத்திய ஓவியம், கையெழுத்து, கட்டுரை போட்டிகளில் நம் பள்ளியில் இருந்து ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர். வெற்றிக்கனி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு விருதும், சான்றிதழும்

வழங்கப்பட்டது. மேலும் சிறந்த முன்மாதிரி முதல்வர் விருது நம் பள்ளி முதல்வர் திருமதி நாஸ் பர்வர் அவர்களுக்கு (AICDC) வழங்கினார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் .



பிரசன்னா II அ



இனியா V ஆ



நெளஷத் ரைஹான் VI ஆ




ஷாஹித் ஹபீஸ் II அ



அனீஸ் பாத்திமா X அ



சப்ரின் ரில்வானா X அ



சுவேதா X அ




ந.தௌபிக் VII அ




சதுர்வேதா X அ

FATHIMA CENTRAL SENIOR SECONDARY SCHOOL
No:5, Police Lane, Alandur road, Saidapet, Chennai-600015
ROSHINI
Published Monthly by the Teachers & Students
February 2022

# POEMS ON DISCIPLINE

## POEM I

S.SHAMEEMA XA

If we need to have a long lifeline, then, we must be disciplined.

Discipline is the biggest streamline of our life.

Discipline is a great guidance for success.

The headline of our life is judged by our discipline.

Disciplined people complete their work before the deadline.

"Whoever loves Discipline, loves knowledge, but he/she who hates reproof is stupid".

## POEM II

J.ARSHIYARAHIMA VI A

Discipline is the watchword everywhere whether be it society, school, an organization, or home.

Even in general life, the rules of nature if broken would mean ill-health.

It is the keyword for a smooth system of life.

It helps to generate self-confidence and self-control in our life.

Discipline is also important for a nation's development.

# POEM III

G.SHARAN VI

Some go in search of discipline,
The others – “it” will find
And bring change forth,
With an action that first
Starts in the mind.
It's a holding to a pattern
That leads to a dream of change.

# PARAGRAPH ON DISCIPLINE

NUDRATASMA K VI

Discipline is something that keeps each person in control. It motivates a person to work hard in life and achieve success. Everyone follows discipline in his/her life in different forms. Besides, everyone has his own perspective of discipline. Some people consider it as part of their life and some don’t. It is the guide that directs a person on the right path. Without discipline the life of a person will because dull and inactive. Also, a disciplined person can control and handle all situations of living in a sophisticated way than those who do not. Moreover, if you have a plan and you need to implement it in your life then you need to be disciplined. It makes things easy for you to handle and ultimately brings success to your life.

## DISCIPLINE RELATED FACT

**Students who are disciplined tend to get better scores, as compared to the undisciplined ones.**

## SAFETY RELATED – JOKES

**DARSHAN SAI IIA**

**Today I was learning about electrical safety.**

**I was shocked!!**

## DISCIPLINE RELATED JOKES.

**Today the teacher yelled at me**
**for something I did not do? What was that?**
**My homework!**

## FACT

**J. JASWANT SAI IV**

**Students who are more disciplined take much interest in studies. They can choose their subjects and make wise decisions independently.**

# ESSAYS ON DISCIPLINE

## ESSAY I

M.SUMAIYA FATHIMA X A

"People do not remember you by the wealth or fame or success you attained during your lifetime but by how disciplined your life is ". They will not forget you even in your absence.

Discipline – What does this word mean? One tends to think it is obligatory which everyone should do; some think it as a punishment; but it is not, Discipline is just like magnets.

Magnets attract those metals which have iron and repel those metals who are deficient of iron.

Here metals are like human beings, magnets like success and iron as discipline people who are disciplined will always be able to attract success whereas people who lack discipline will always repel success.

In other words discipline is like Mendel's law of dominance, in which some are dominant and others are recessive, people with discipline will always be dominant compared to recessive, they will always display themselves through their discipline and be dominant.

Discipline is just like math's, if we know the formulas, it's easy to solve the equation, just like life, we have discipline. We have solutions to every equation of our life.

# ESSAY II

**S. ELAKIYA VII**

**Discipline is one of the powerful word in one's life. The meaning of discipline is to obey rules and behave well.**

**The word "discipline" is from the Latin word discipline meaning "instruction and training". It is derived from the root word discern - "to learn". We should always be disciplined to everyone. Discipline is something that keeps each person in control and to become more focused. It provides people with rules to live their lives efficiently and effectively. Discipline is very important in our life as it helps us to train our mind and body. The value of discipline is good foundation of being selective, independent, punctual, focused, encouraged and organized in life. Discipline in student's life is very important as it helps him/her to achieve his / her career goals. Self-discipline is very important in inhibiting headlong desires and passions. As compared to those who disregard discipline, a disciplined child takes interest in studies. The types of discipline are: Positive discipline, Gentle discipline, Boundary-based discipline, Behavior Modificative, Emotion coaching.Dr. A.P.J. Abdul Kalam once said, "The cost of DISCIPLINE is always LESS than the Regret. So, Self-discipline is the BIGGEST Investment for success in Life".**

# QUOTES ON DISCIPLINE

N. TAUFEEQH VII

- Discipline is the key to success.
- Without discipline there is no life at all.
- Discipline turns ability into achievement.
- Discipline is the bridge between goals and accomplishment.
- Success is nothing more than a few simple disciplines.
- Without hardwork and discipline, it is difficult to be a professional.
- For every disciplined effort, there are multiple rewards.
- Self-Command is the main discipline.
- Discipline is your friend not your enemy.
- Discipline when you accept a challenge see it through.
- The whole point is to discipline the mind.

# QUOTES ON DISCIPLINE II

SAI SWEATHA VI

- Motivation gets you going, but discipline keeps you growing.
- Self-Discipline is a key ingredient to success,
- With self-Discipline anything is possible.
- Discipline is being able to force yourself to do something, in spite of how you feel. Over and over until it becomes a habit.

# QUIZ ON SAFETY

- 1. A stroke in the bone is called:
    - A. Sprain
    - B. Fracture
    - C. Heat Stroke
- 2. Before removing an object from your eye, you must .......
    - A. Drink electrolyte
    - B. Use sprint to give support and avoid movement
    - C. Wash your hands
- 3. Electrolyte is ........
    - A. Vegetable juice
    - B. Electrical support
    - C. Solution of water with sugar and salt
- 4. If a person's clothes are in fire .......
    - A. run
    - B. roll
    - C. pump
    - D. drop
    - E. stop
- 5. ........ You can apply for animal bites to avoid further infection.
    - A. sling for support
    - B. ice pack on the wound
    - C. antiseptic ointment

- **6. A dog bite may spread a life-threatening disease called:**
  - **A. Malaria**
  - **B. Cholera**
  - **C. Rabies**
  - **D. Chicken pox**

## FUN FACTS ON SAFETY

- **Approximately 4 million people are disabled at work every year**
- **Fire kills more Americans every year than all the natural disasters combined.**
- **55% of teenagers had involved in fatal car accidents last year for not wearing their seat belts at the time of collision.**
- **More than 250 people died while taking selfie photos in the year 2011 and 2018.**

## JOKE ON SAFETY

- **Please be safe:**
- **Do not stand, sit, climb or lean on Zoo fences.**
- **If you fall, animals can eat you and that will make the animals to fall sick.**

# ACHIEVEMENTS OF THE MONTH

 

- All India Citizens Development Centre had chosen and awarded our honorable Principal Mrs. A. Naaz Parwar as an Ideal Principal of the year 2021. They had conducted events on Drawing, Handwriting & Essay Competition for the academic year 2021 – 2022.
- We are happy that the following students have been awarded, awards in the following categories:
- Kala Ratna Award 2021 - K. Jaswanthi Sai (IV B)
- Kala Shri Award 2021 - Irfana I. (X A)
- Vidya Bhushan Award 2021 - G. Sathana (VIII A)
- And also the winners have been awarded with the certificates and mementoes.


**Newsletter Editorial Board**

**TAMIL**

Mrs. Sharmila Mrs. Poongodi

**ENGLISH**

Mrs. Salma Sulaiman

Mrs. Nirmala Rani